---

# கட்டுநாயக்க – சீதுவை நகர சபை

## கம்பஹா மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூன் 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2014 மார்ச் 26 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கட்டுநாயக்க - சீதுவை நகர சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டுக் கொள்கைகளின் படி சகல வருமானங்களும் செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிலையான வைப்பு வட்டி வருமானத்திற்காக காசு அடிப்படை பின்பற்றப்பட்டிருந்தது.

---

## 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கு உரித்தாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் தொழிலுக்காக செலுத்தப்பட வேண்டிய மூலதனச் செலவினங்கள் கணக்கீடு செய்யப்படுகையில் மூலதனச் செலவினக் கணக்கு வரவு வைக்கப்பட்டிராததுடன் கடன்கொடுத்தோர் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெறவேண்டிய மூலதன மானியம் உரிய பட்டோலையின் படி ரூபா 7,016,331 ஆகக் காணப்பட்ட போதிலும் நாட்குறிப்பு இல. 28 இன் மூலம் பெறவேண்டிய மூலதன மானியமாக ரூபா 15,475,261 தொகை உரிய கணக்கில் வரவு வைக்கப்பட்டு மூலதன மானியக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்த தொகை ரூபா 16,475,261 ஆகும்.

(இ) நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட மூலதன மானியத்தின் பெறுமதி ரூபா 17,648,279 ஆன போதிலும் உரிய பட்டோலையின் படி இது ரூபா 10,354,308 ஆகக் காணப்பட்டது.

(ஈ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து ஒவ்வொரு செயற்திட்டத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்காக மீளாய்வாண்டின் போது வட்டியாக ரூபா 2,080,840 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ் வட்டிக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக இது செலுத்த வேண்டிய வட்டிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் செலுத்த வேண்டிய கடன் வட்டிக் கணக்கில் ரூபா 1,072,129 தொகை வரவு மீதியாகக் காணப்பட்டது.

(உ) மழைநீர் அகற்றும் செயற்திட்டத்திற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து செலுத்த வேண்டிய கடன் கணக்கிற்கு ரூபா 1,250,075 வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக செலவுப் பதிவும் இல்லாததுடன் இது தொடர்பான விபரமும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட

வேண்டிய கடன் தவணைப் பணமும் வட்டியுமான ரூபா 318,098 தொகை கடன் கணக்கு வரவு வைக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டிய கடன் மற்றும் தவணைப்பணம் மற்றும் வட்டிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்திக் கடன் கணக்கிற்கு ரூபா 150,075 வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) பொழிப்பு வருமானப் பதிவேட்டின் படி மீளாய்வாண்டின் போது வீதவரிப் பெறுவனவுகள் ரூபா 59,243,990 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டோலைகளின் படி இது ரூபா 61,983,135 ஆகக் காணப்பட்டது.

(எ) நாட்குறிப்புப் பதிவு இல. 07 இன் மூலம் மீளாய்வாண்டின் போது வீதவரிக்காக கொடுத்த கழிவுப் பெறுமதியான ரூபா 3,606,893 தொகை கொடுத்த கழிவுக் கணக்கு வரவு மற்றும் நிலுவை வீதவரி கணக்கு செலவாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்குகளில் அப் பெறுமதியால் கொடுத்த கழிவு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது முத்திரை வருமானம் ரூபா 7,130,995 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 16,846,759 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட முத்திரை வருமானமான ரூபா 7,130,995 தவறுதலாக இரு தடவைகள் முத்திரை வருமானக் கணக்கிலும் பெறவேண்டிய முத்திரை வருமானக் கணக்கிலும் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் பெறவேண்டிய முத்திரை வருமானமான ரூபா 15,000,000 தொகை இரு தடவைகள் பதியப்பட்டிருந்தன.

(ஒ) நானாவித வைப்புப் பேரேட்டுக் கணக்கில் வைப்புப் பெறுவனவாக ரூபா 13,206,902 ஆன போதிலும் தொகுதி சேகரிப்புப் பதிவேட்டின் படி பெறுவனவு ரூபா 11,859,797 ஆகக் காணப்பட்டது. இதன் படி, ரூபா 1,347,105 அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் இறுதியில் கையிலுள்ள காசு ரூபா 423,102 தொகை வங்கி மீதியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2013 மே 30 ஆம் திகதி வரையில் 10 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களுக்கு உட்படுத்தப்பட்ட கணக்கீடு செய்யப்படக்கூடிய கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 6,798,538 ஆகக் காணப்பட்டது.

**(ஆ) கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 271,085,752 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 04 கணக்கு விடயங்களுக்கு உரித்தான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 98,018,704 ஆனதுடன் அவற்றிற்கு உரித்தான துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளின் பிரகாரமான மீதி ரூபா 85,851,869 ஆகக் காணப்பட்டது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,096,608 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த

முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 50,626,799 ஆக இருந்தது.

## 2.2 நிதி நிருவாகம்

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நூலக செயற்திட்டத்திற்காக 2009 ஆகஸ்ட் 11 ஆம் திகதி ரூபா 18,058,218 தொகையான கடன் தொகை உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்தது. 2011 செப்தெம்பர் 30 ஆம் திகதி முதல் தவணைப்பணம் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் எவ்வித கடன் தவணைப்பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவாக வங்கியிலிருந்து பணம் கொண்டுவரப்படுவதற்காக பாதுகாப்பு நடைமுறைகள் சபையால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 1995 மார்ச் 09 ஆம் திகதிய எல்ஜீடீ/95/04 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி நிலையான வைப்பைக் காசாக மாற்றுகையில் உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 15,000,000 இற்கான 06 நிலையான வைப்புக்களைக் காசாக மாற்றுகையில் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 139(10) இன் பிரகாரம் காசோலைகளின் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகையில் வங்கி மீதி சகல கொடுப்பனவுகளையும் தீர்க்கக்கூடிய வகையில் போதுமானதென உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய போதிலும் இவ்வாறு செய்யப்பட்டிராமையால் 2012 திசெம்பர் 31 இல்

உள்ளவாறு காசேட்டில் ரூபா 1,892,056 தொகையான மறை மீதி காணப்பட்டது.

(உ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 485(4) இன் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச்சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 96,778 தொகையான கடன் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீண்டெழும் செலவினத் தலைப்பு 38 இல் ரூபா 34,760,135 தொகையும், மூலதனச் செலவின விடயங்கள் 03 இல் ரூபா 2,784,046 தொகையும் ஏற்பாடுகளுக்கும் மேலாக செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் இதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்கு உரித்தாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | வருமான விடயம் | மதிப்பீடு | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா'000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 55,701 | 58,595 | 71,081 |
| (ii) | வாடகை | 8,251 | 10,855 | 956 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,066 | 2,791 | 852 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 27,116 | 33,296 | 2,833 |

**2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2003 பெப்ரவரி 15 ஆம் திகதிய எல்/பீ/3/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டிற்கு உரித்தான நீதிமன்றத் தண்டப்பணம், முத்திரைக் கட்டணம், மாகாண சபை மானியம் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட மானியம் தொடர்பாக எதிர்வுகூறப்பட முடியாமையால், அத்தகைய வருமானம் பெறப்படும் ஆண்டின் போது அவ் ஆண்டிற்கு உரித்தாக்கிக்கொள்ளப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக 2012 ஆம் ஆண்டிற்கான முத்திரை வருமானத் தொகையாக ரூபா 15,000,000 தொகை மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கம்பஹா காணிப் பதிவாளர் அலுவலகத்தில் 2007 ஆம் ஆண்டிலிருந்தும் கொழும்பு அலுவலகத்தில் 2010 ஆம் ஆண்டிலிருந்தும் பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 வீதவரி**

(அ) நகர சபை கட்டளைச் சட்டத்தின் 170 இன் பிரகாரம், நிலுவையான வீதவரி ரூபா 71,081,495 அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர சபை கட்டளைச் சட்டத்தின் 160, 161 இன் பிரகாரம், அங்கீகாரம் இன்றி ரூபா 140,337 தொகையான வீதவரி விடுவிக்கப்பட்டு பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளில் வீத வரி மீட்பு மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**2.3.4 ஏனைய வருமானம்**

உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 88/20 மற்றும் 1988 ஏப்ரல் 20 ஆம் திகதிய சுற்றறிக்கையின் படி, அறவிடப்பட உள்ள நிலுவையான ஏனைய வருமானம் தொடர்பான சுற்றறிக்கையின் படி காலப்பகுப்பாய்வுக் கூற்று ஒன்று சுற்றறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பின்வருவோர் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் சபையில் சமர்ப்பித்து தற்போதைய நிலையை சபைக்குத் தெரியப்படுத்த வேண்டிய போதிலும் நிலுவையான ஏனைய வருமானத் தொகையான ரூபா 4,641,179 தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

முன்னைய ஆண்டுகளுக்கு உரித்தாக அறவிடப்பட வேண்டிய மல அகற்றல் கட்டணம் ரூபா 160,893 தொகையும் வினோத வரி ரூபா 276,000 தொகையும், குப்பை வரி ரூபா 1,937,887 தொகையும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் பெறவேண்டியிருந்த அனுமதிப்பத்திரக் கட்டணமான ரூபா 852,000 தொகையும் வினோத வரியான ரூபா 1,937,886 தொகையும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 வீதவரி**

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட வீதவரி வருமானம் ரூபா 03 மில்லியன் தொகையாலும் ஏனைய வருமானம் ரூபா 09 மில்லியன் தொகையாலும் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

**2.3.7 கடை வாடகைக்கிடல்**

(i) சீதுவை புதிய வியாபாரக் கட்டிடத் தொகுதியின் அடிப்படை வரைபடத்திற்கு மேலதிகமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த 14

கடைகளைக் கொண்ட இரண்டு மாடி வியாபாரக் கட்டிடம் பிரதான வீதியை எதிர்நோக்கும் வகையில் இன்மையால் இது வரையில் ஒரு கடையேனும் வாடகைக்கு வழங்கப்படுவதற்கு முடியாதிருந்தது.

(ii) ச.தொ.ச நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 05 கடைகளிலிருந்து வாடகை உடன்படிக்கையின் 4 ஆம் பந்தியின் படி செலுத்தப்பட வேண்டிய தண்டப்பணமான ரூபா 3,889,982 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) லக் ச.தொ.ச நிறுவகத்தின் விற்பனை நிலையத்தில் கடைகள் லக் ச.தொ.ச நிறுவகத்தின் தேவைப்பாட்டில் மாற்றியமைப்பதற்காக ஏற்பட்ட செலவினமான ரூபா 597,196 தொகை பாதுகாப்புப் பிணையாக கணக்கிடப்பட்டிருந்தது.

**2.3.8 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டிராத ஹொட்டேல்களிலிருந்தும் லொஜ்களிலிருந்தும் வரி அறவிடப்படுவது தொடர்பாக 2012 சனவரி 31 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் விதந்துரைக்கப்பட்டுள்ளது. முதலீட்டு மேம்பாட்டு வலயம் ஒன்றும் பாரிய நகரமயமாக்கப்பட்ட அதிகாரப்பகுதியுமான நகர சபை எல்லைக்குள் ஹொட்டேல்களிலிருந்தும் லொஜ்களிலிருந்தும் வரி அறவிடப்படுவதற்கு துணைச்சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கையில் வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.9 திண்மக் கழிவு முகாமைத்துவம்**

2008 யூலை 30 ஆம் திகதிய 1560/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள 2008 இன் 01 ஆம் இலக்க திண்மக் கழிவு முகாமைத்துவ விதியின் படி அறவிடப்பட வேண்டிய வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(அ) விதிக் கோவையின் 18(1) ஆம் இலக்கத்தின் படி உரிய உள்ளூராட்சி நிறுவகத்திற்குச் செலுத்தப்படும் வரிக்கு மேலதிகமாக, குப்பைகளை வீடுவீடாகச் சென்று சேகரிக்கும் செலவினத்தைத் தீர்ப்பதற்காக அதன் 1 ஆம் பட்டோலையில் உள்ள பயன்பாட்டுக் கட்டணம்,

(ஆ) விதி இல. 09 இன் படி, அதன் 3 ஆம் பட்டோலையில் விதந்துரைக்கப்பட்டவாறு குப்பைகளின் அளவுக்கேற்ற வகையில் கட்டணம்,

(இ) விதி இல. 20 இன் படி, நிர்மாணிப்பு கழிவுப் பொருட்கள் மற்றும் சேதமடைந்தவற்றின் சேகரிப்புகளுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம்,

(ஈ) விதி இல. 21 இல் உள்ள "இடத்திற்கான தண்டப்பணம்"

## 2.4 இருப்புக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விநியோகிக்கப்பட்ட இருப்பு, இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இருப்புத் தேவைப்பாடு குறித்தும் எஞ்சிய இருப்பு தொடர்பாகவும் முறையான கவனம் இன்றி இருப்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் 2 முதல் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திற்கு முறையே ரூபா 86,351 மற்றும் ரூபா 412,523 பெறுமதியான இருப்பு விநியோகிக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## 2.5 அறவிடப்படுவதற்குள்ள ஊழியர் கடன்

கடமையை விட்டுச் சென்ற மற்றும் இறந்த 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 55,314 தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 மக்கள் சுகாதார நெருக்கடியை விலக்கல்

2012 யூன் 27 ஆம் திகதிய 1764/14 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள 2012 இன் 03 ஆம் இலக்க மக்கள் சுகாதார நெருக்கடியை விலக்கும் விஞ்ஞாபனத்தின் மூலம், மேல் மாகாண மக்கள் சுகாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் பாதுகாக்கும் பொருட்டு நுளம்புகளால் ஏற்படும் நெருக்கடி மற்றும் நோய்களைத் தடுப்பதற்காகவும் ஏனைய மக்கள் நெருக்கடிகளை மட்டுப்படுத்தும் பொருட்டும் இதனுடன் தொடர்பான அல்லது இணைவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.7 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய மற்றும் பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் படி சபையின் நோக்கும் செயற்பணியும் மேற்கொள்ளப்படுவதற்காக நான்காண்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுகையில் பின்பற்றப்பட வேண்டிய பின்வரும் அவதானிப்புகள் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) கடந்த 05 ஆண்டுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள்

(ஆ) வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளின் அளவு

(இ) நிதி மதிப்பீடு

(ஈ) சில பிரிவுகளுக்கான எதிர்வரும் ஆண்டுகளுக்கான இலக்கு

(உ) நான்காண்டு காலப்பகுதியின் போது வருடாந்த இலக்குகளின் பல்வகைமை

**2.8 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவகத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் கோரப்பட்டுள்ளது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) சொத்து முகாமைத்துவம்
(ஊ) வாகனக் கட்டுப்பாடு